செய்யும்போது ஒரு எமௌன்டைப் பிடித்துக் கொண்டு, பாக்கியைத் திருப்பிக் கொடுக்க ஏற்பாடு செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அதைத்தான் பரிசீலனை செய்துக் கொண்டிருக்கிறோம். எங்கெல்லாம் கெஜடட் ஆபீசர்கள் இருக்கிறார்களோ அங்கெல்லாம் உடனடியாக பணத்தைத் திருப்பி கொடுக்கலாம் என்கிற யோசனை பரிசீலனையில் இருக்கிறது.

மதுகாச மருந்து

* 524 கேள்வி.—திரு. ஆ. தங்கவேலு : கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) மதுகாச மருந்தை தடை செய்ய வேண்டுமென்று தென் கடலூர் மாவட்ட அபிவிருத்தி மன்றம் 2—11—1965-ல் நடைபெற்ற கூட்டம் அரசாங்கத்திற்கு சிபாரிசு செய்திருக்கிறதா ?

(இ) ஆம் எனில், அதன் மீது என்ன நடவடிக்கை எடுக்கப் பட்டது ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : (அ) & (இ) சபை முன் 9–30 a.m.
விவர அறிக்கை* ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

திரு. ஆ. தங்கவேலு : தலைவரவர்களே, மதுவிலக்கை ரத்து செய்த அரசாங்கம் மதுகாசக் கடைகளைத் தாராளமாக வைத்துக் கொள்ள அனுமதித்து இருப்பது, மது குடிப்பதை மறைமுகமாக அனுமதிப்பதாகக் கூறப்படுகிறதே, அது உண்மையா ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : இல்லை.

திரு. இராம. அரங்கண்ணல் : இந்த மதுகாசம் போன்ற பொருள்களைத் தடுக்கவேண்டுமென்று சொன்னால் இந்தியன் டிரக்ஸ் ஆக்ட்டைத் திருத்தவேண்டுமென்று அறிகிறேன். ஆகவே, அது சம்பந்தமாக நம்முடைய சர்க்கார் இந்திய சர்க்காருக்கு எழுதி, டிரக்ஸ் ஆக்டைத் திருத்துவதற்கு ஏற்பாடுகளைச் செய்து இருக்கிறதா ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : மத்திய அரசாங்கம் Indian Drugs and Cosmetics Amendment Act கொண்டுவரப் போகிறார்கள். அதற்கு நம்முடைய மாகாணத்தில் விற்கக்கூடிய மருந்துகள், தேவைகள் இவற்றிலே இந்திய மருத்துவ முறைப் பிரகாரம் எவற்றையெல்லாம் அதிலே சேர்க்க வேண்டும், சேர்க்கக் கூடாது என்ற சிபாரிசுகள் மத்திய அரசாங்கத்திற்கு அனுப்பப் பட்டிருக்கின்றன.

திரு. கோ. சி. மணி : இந்த மதுகாசம் குடித்து ரசீது வைத்து இருந்தும், மதுகாசம் குடித்தவர் என்று சொல்லப்பட்டும், டாக்டர்கள் மதுகாசத்திலே ஆல்கஹால் அதிகமாக இருக்கிறது

* 728–729-ம் பக்கத்தில் 9-வது இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.

[8th November 1966

என்று சர்டிபை செய்ததால் நீதிபதிகள் அப்படிப்பட்டவர்களைத் தண்டிக்கிறார்கள். மதுவிலக்கு அமலில் இருக்கின்ற நேரத்திலே பகிரங்கமாக இதற்கு லைசென்ஸ் வழங்கவேண்டிய அவசியமென்ன?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : மதுகாசத்திலே ஒரு குறிப்பிட்ட பர்சன்டேஜ் ஆல்கஹால் இருக்கலாம் என்று அனுமதிக்கப்பட்டிருக்கிறது. மதுகாசம் என்ற பெயரினால் மற்ற வற்றைச் சாப்பிடுகிறவர்கள்தான் பிடிக்கப்படுகிறார்கள். அவற்றை யெல்லாம் டாக்டர்கள் ஒப்புக் கொள்வதற்குத் தயாராக இல்லை. ஆகவே குறிப்பிட்ட பர்சன்டேஜ்க்கும் அதிகமாக ஆல்கஹால் இருந்தால் அவர்கள் குற்றம் செய்ததாகக் கருதி அவர்கள்மேல் நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

திரு. கேஆர். ஆர்எம். கரியமாணிக்கம் அம்பலம் : இந்த மதுகாசத்தினாலே பலவிதக் கோளாறுகள் ஏற்படுகின்றன என்பது நன்றாகத் தெரிகிறது. இருந்தும்கூட அதிகமாக அதை விற்பதற்கு லைசென்ஸ் கொடுக்கப்படுகிறதே அதையாவது கட்டுப்படுத்து வதற்கு அரசாங்கம் முன்வருமா ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : மதுகாசத்தினாலே பலவித கோளாறுகள் வருகின்றன என்பதை ஒப்புக்கொள்வதற்கு தயாராக இல்லை. மதுகாசம் உபயோகப்படுத்தலாம் என்று அலௌவ் பண்ணித்தான் லைசென்ஸ் கொடுக்கப்படுகிறது. மது காசத்திலே pharmaceuticals pure alchohol போன்றவையும் விற்பனை செய்கின்ற காரணத்தினாலே டிரக்ஸ் இன்ஸ்பெக்டர்கள் சென்று நடவடிக்கை எடுக்க அரசாங்கம் உத்தரவு பிறப்பித்திருக்கிறது. அந்த நடவடிக்கையின் காரணமாகப் பலர் பாதிக்கப்படுகிறார்கள்.

பிச்சைக்கார விடுதி.

* **525 கேள்வி.—திரு. து. ப. அழகமுத்து :** கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப் பாரா—

(அ) சமீபத்தில் அமுலுக்கு வந்த பிச்சை எடுப்பு தடுப்பு (திருத்த) சட்டத்திற்கு வகை செய்யும் வகையில், பிச்சைக்காரர் களுக்கு விடுதிகள், தொழில் நிலையங்கள் முதலியவற்றை நிறுவு வதற்கு அரசாங்கம் ஆவன செய்துள்ளதா ?

(இ) அப்படியானால், அதன் விவரமென்ன ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : (அ) புதிதாக பிச்சைக் கார விடுதிகள், தொழில் நிறுவனங்கள் ஏற்படுத்த அவசியம் எழவில்லை.

(இ) வினாவிற்கு இடமில்லை.

திரு. து. ப. அழகமுத்து : தலைவர் அவர்களே, பிச்சையெடுப்ப வர்களைத் தடுக்கின்ற சட்டம் அமலுக்குக் கொண்டு வரப்பட்டிருக் கிறது. ஆனால் அதற்குப் போதுமான முன் நடவடிக்கை எடுக்கப்